20.11.2025.
O.S.No. 139/2018

வா. சா. 1 ராமசாமி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–

பிராது தாக்கல் செய்வதற்கும் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கும் விவரங்களை நான்தான் சொன்னேன். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்த்தேன். நான் விவசாயம் மற்றும் தேங்காய் வியாபாரம் செய்கிறேன். எனக்கு தென்னந்தோப்பு உள்ளது. எனக்கு பணம் வட்டிக்கு கொடுக்கும் தொழில் கிடையாது என்றால் சரிதான். நான் 12ம் வகுப்புவரை படித்துள்ளேன். என் பெயரில் விவசாய நிலங்கள் உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் கண்ட முகவரியில் நான் வசிக்கிறேன் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி என்னுடன் பள்ளியில் படித்தவர் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி என் ஊர்க்காரர் என்பதால் எனக்கு பழக்கம். பிரதிவாதி எனக்கு குடும்ப ரீதியாக பழக்கம் உள்ளவர். பிரதிவாதி எதிர்வழக்குரையில் என்னை யார் என்றே தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என்னை மோசடி செய்யவேண்டும் என்று அவ்வாறு சொல்லியுள்ளார். தாவா பணம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படுவதை தவிர அதற்கு முன்னர் வேறு கொடுக்கல் வாங்கல் கிடையாது என்றால் சரிதான். எனக்கு வங்கி கணக்கு உள்ளது. நான் வருமானவரி செலுத்துவதில்லை. பணம் கொடுப்பதற்கு 10 நாட்களுக்கு முன்னர் பிரதிவாதி என்னிடம் வந்து பணம் கேட்டார்.தேதி குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்றால் சரிதான்.

எனது வங்கி கணக்கில் பணம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் தேதியில் ரூ.18 லட்சம் இருந்ததா என்றால் பணம் இருந்தது. பணம் எவ்வளவு இருந்தது என்பது தெரியாது. எனது வங்கி கணக்கை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய இயலும். விவசாயத்தின் மூலமாக வருடத்திற்கு தோராயமாக ரூ.20 லட்சம் வரும். அவ்வாறு இருந்தும் இதுவரை வருமானவரி செலுத்துவதில்லை என்றால் சரிதான். 15.08.2015 ம் தேதி என் கைவசம் ரூ.18 லட்சம் இருந்தது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடனுறுதிச் சீட்டை பிரதிவாதி செந்தில்குமார்தான் வாங்கிவந்தார். பிராதில் கடனுறுதிச்சீட்டை செந்தில்குமார் வாங்கிவந்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அவர் அந்த புரோநோட்டை எங்கு வைத்து வாங்கினார் என்பது எனக்கு தெரியாது. வரும்போது கொண்டுவந்தார். வாதசாஆ.1 ல் தேதி என்ற இடத்தில் 200 என்ற எழுத்து அடிக்கப்பட்டு 2015 என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2000 ம் வருடத்திற்கு பின்னிட்ட புரோநோட்டுக்களில் தான் 200 என்று எழுதப்படும் என்றால் சரிதான். ஆனால் அந்த புரோநோட்டை பிரதிவாதிதான் கொண்டுவந்தார். அதனால் 2000 க்கு பின்னிட்ட புரோநோட்டை வாங்கி 2015 என மோசடி செய்து கடனுறுதிச் சீட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டு 15.08.2015 ம் தேதி பிரதிவாதி கையெழுத்து போட்டுக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டபோது ஒரு வாரத்தில் பணம் தருவதாகக் கூறினேன். வீட்டிலிருந்த பணத்தையும், வியாபாரத்திற்கு வைத்திருந்த பணத்தையும் வைத்து கடன் கொடுத்தேன். 15.08.2015 ம் தேதி புரோநோட்டு சாட்சிகளை பிரதிவாதி செந்தில்குமார்தான்

வரச்சொன்னார். அவர்கள் பிரதிவாதியுடன்தான் வந்திருந்தார்கள். புரோநோட்டில் கையெழுத்து செய்த 2வது சாட்சி குப்புச்சாமி எப்படி பழக்கம் என்றால் உள்ளூர்க்காரர். அவர் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் இல்லை. குப்புச்சாமி இன்று நீதிமன்றத்தில்தான் இருக்கிறார் என்றும் நான் இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள கைரேகை பிரதிவாதியின் கைரேகை இல்லை என்றால் சரியல்ல. புரோநோட்டில் கண்ட ரூ.18 லட்சத்தை பிரதிவாதி என்னிடம் கடன் பெறவில்லை என்றும், அந்த தொகையை கொடுக்க எனக்கு வசதி கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் 15.08.2018ம் தேதி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 15.08.2015லிருந்து 15.08.2018 வரை வாய்மொழியாகத்தான் வட்டியைக் கேட்டுவந்தேன். மேற்படி 3 வருட காலத்தில் எந்த எந்த தேதியில் போய் கேட்டேன் என குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். பக்கத்தில் இருப்பதால் அடிக்கடி கேட்டுவந்தேன். நீதிமன்றத்திற்கு வெளியே இருக்கும் நபரை காட்டி அவர்தான் குப்புச்சாமி என்ற கேள்விக்கு சாட்சி ஆம் என ஒப்புக்கொண்டார். ஆனால் அவர் என்னுடன் வரவில்லை என்று கூறினார். ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் குப்புச்சாமியை எனது தரப்பு சாட்சியாக விசாரித்துள்ளேன் என்றால் சரிதான். குப்புச்சாமிக்கு இந்நீதிமன்றத்தில் வேறு வழக்கு உள்ளதா என்பது எனக்கு தெரியாது. குப்புச்சாமி என்னுடன்தான் நீதிமன்றத்திற்கு வந்தார் என்றும், நான் அவர் என்னுடன் வரவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புரோநோட்டில் கையெழுத்து செய்துள்ள 1வது சாட்சி எனது நண்பர் என்றால் உள்ளூர்க்காரர். எனக்கு பழக்கம். எதிர்வழக்குரையில்

பிரதிவாதி புரோநோட்டில் உள்ள அவரது கையெழுத்தையும் கைரேகையையும் தன்னுடையது இல்லை என மறுத்துள்ள நிலையில் அதை கைரேகை நிபுணருக்கு அனுப்பி வைப்பதற்கு நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பிரதிவாதிதான் எடுக்கவேண்டும். நிரூபண வாக்குமூலத்தில் யார் மூலமாக பிரதிவாதியிடம் பணம் கேட்டு வந்தேன் என்பதை குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால் சரிதான். பிராது தாக்கல் செய்வதற்கு முன்னர் பணத்தை திருப்பிக்கேட்டு எழுத்து மூலமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி நிலத்தை கிரையம் செய்யப்போகிறார் என்பதால் வழக்கை உடனே தாக்கல் செய்தேன். 2 வது சாட்சி குப்புச்சாமி என்பவர் பிரதிவாதி மீது ஒட்டன்சத்திரம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அதைப்பற்றி தெரியாது. 2010 க்கு பின்னாடி உள்ள புரோநோட்டில் 201 என்று குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும் தாவா புரோநோட்டில் 200 என குறிப்பிடப்பட்டுள்ளதால் அது 2010 க்கு முந்திய புரோநோட்டு என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிதான் கொண்டு வந்தார். அதுபற்றி பிரதிவாதியிடம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். புரோநோட்டை பிரதிவாதி சொல்ல குப்புச்சாமி எழுதினார். புரோநோட்டை குப்புச்சாமிதான் எழுதினார் என பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா புரோநோட்டு போர்ஜரியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றும் பிரதிவாதியின் சொத்தை பரிப்பதற்காக தாவா புரோநோட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு வரவேண்டிய தொகைக்காகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். புரோநோட்டு எழுதிய காலகட்டத்தில் பிரதிவாதிக்கு சொத்துக்கள் இருக்கிறது என்ற

விவரம் தெரியுமா என்றால் தெரியும். இவ்வளவு பெரிய தொகை கொடுக்கும்போது சொத்து பத்திரம் வாங்கிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி 6139 மாதத்தில் பணம் கொடுப்பதாகச்சொன்னார். 6 மாதத்தில் பிரதிவாதி பணம் கொடுப்பதாக கூறியதுபற்றி பிராதில் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். தொடர்ந்து கேட்டு வந்தேன். 6 மாதம் கழிந்தும் பிரதிவாதி பணம் செலுத்தாமல் இருந்துவந்தபோது வழக்கு தாக்கல் செய்யும் 3 வருட காலம்வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நேரில் கேட்டபோதெல்லாம் தருவதாக காலம் கடத்திவந்தார். தாவா புரோநோட்டு பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்பதால்தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி ரூ.18 லட்சம் வாங்கியதாக சொல்வது தவறு என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், ரூ.18 லட்சம் கொடுக்க வசதியில்லை என்றும் எனவே தாவா வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.11.20 19:22:03 +0530

Principal District Judge,
Dindigul.